செய்தி வெளியீடு எண்:752 நாள்: 07.11.2017

# <u>பாரத ரத்னா, புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடர்பான, விழா மலர் குழு கூட்டம், மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது</u>

சென்னை கலைவாணர் அரங்க கூட்டரங்கில் இன்று (07.11.2017) பாரத ரத்னா, புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடர்பான, விழா மலர் குழு கூட்டம் மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார் அவர்களின் தலைமையிலும், மாண்புமிகு செய்தி–விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாநிலம் முழுவதும் மாவட்ட வாரியாக கடந்த 30.06.2017 மதுரை மாவட்டத்தில் தொடங்கி இதுவரை 21 மாவட்டங்களில் பாரத ரத்னா, புரட்சித் தலைவர், டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த நூற்றாண்டு விழாவின் நிறைவு விழா, சென்னையில் சிறப்பாக நடத்தப்படவுள்ளதையொட்டி பாரத ரத்னா, புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்கள் திரைப்படத்தின் வாயிலாக தமிழ்ச் சமுதாயத்திற்கு தெரிவித்த அரிய பல கருத்துக்களை சேகரித்தும், தமிழ் நாட்டிற்கு முதலமைச்சராக டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்கள் ஆற்றிய பல சாதனைகள் குறித்தும் விழா சிறப்பு மலர், குறும்படம் மற்றும் அரிய புகைப்படங்கள் அடங்கிய தொகுப்பு (Album) தயாரித்து வெளியிடப்படவுள்ளது.

எனவே, திரைப்படத்துறையைச் சார்ந்த இயக்குநர்கள் திரு. பாரதிராஜா, திரு. பாக்கிய ராஜ், திரு. உதயகுமார், திரு. நாஞ்சில் ப.க. அன்பழகன் மற்றும் விழா மலர்க்குழு உறுப்பினர்களையும் அன்னாரின் புகழை வெளிக்கொணரும் வகையில் வெளியிட தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தி–விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா தொடர்பாக வெளியிடவிருக்கும் சிறப்பு மலரில், அனைத்துத் தரப்பினரின் வாழ்த்துரைகளும், முக்கிய பிரமுகர்கள் டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்களின் தனித்துவம் குறித்து வழங்கிய பிரத்யேக கட்டுரைகள், வெளியிட்ட சிறப்பு செய்திகள் மற்றும் பேட்டிகள் போன்ற தகவல்கள் அடங்கியிருத்தல் வேண்டும், இச்சிறப்பு மலர் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைய வேண்டி இந்த விழா மலர் குழுவில் அரசு அதிகாரிகள், திரைப்படத்தைச் சார்ந்தவர்கள் முக்கிய பிரமுகர்கள் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இக்குழு உறுப்பினர்கள் பாரத ரத்னா டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்களைப்பற்றிய தனிச்சிறப்புகள், தமிழ்நாட்டிற்கு அவர் புரிந்த சாதனைகள், அவரைச் சார்ந்த முக்கிய நிகழ்வுகள் குறித்த தகவல்களை இக்குழுவிற்கு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும், டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்களின் அரிய புகைப்படங்கள் ஏதேனும் இருப்பின் இக்குழுவிற்கு வழங்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்களின் பொன்மொழிகள், டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்கள் ஆற்றிய சட்டமன்ற உரைகள் போன்ற செய்திகளோடும்

இச்சிறப்பு மலர் அமைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு செய்தி மக்கள்தொடர்புத் துறையைச் சார்ந்த அனைத்து அலுவலர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு செய்தி–விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

முன்னதாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

செய்தி–மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. பொ. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் நூற்றாண்டு விழா தொடர்பாக வெளியிடவிருக்கும் சிறப்பு மலரில் அமையவுள்ள வாழ்த்துரைகள், கட்டுரைகள் மற்றும் பேட்டிகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார்கள்.

இக்கூட்டத்தில் எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர் திரு. ஜெ. ஜெயகாந்தன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர்கள். திரு. அருள், திரு. விசயராகவன், திரைப்பட இயக்குநர்கள், திரு. பாரதிராஜா, திரு. பாக்கிய ராஜ், திரு. உதயகுமார், திரு. நாஞ்சில் ப.க. அன்பழகன், திரு. மருது அழகுராஜ், செய்தி–மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் திரு. உல. ரவீந்திரன், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முடிவில் செய்தி–மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் திரு. எஸ்.பி. எழிலழகன் அவர்கள் நன்றி கூறினார்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**